**தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி**

**தனியுரிமை அறிவித்தல்**

இத்தனியுரிமை அறிவித்தலானது ("தனியுரிமை அறிவித்தல்") எம்மால் வழங்கப்படும் உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் குறித்து, தேசிய அபிவிருத்தி வங்கி எனும் நாம், சேகரிக்கும், பயன்படுத்தும், செயற்படுத்தும் மற்றும் பேணும் அனைத்து தகவல்களிற்கும் ஏற்புடையதாகும்.

தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தகவல்களது பாதுகாப்பிற்கான ஒவ்வொரு தனிநபரினதும் உரிமைகளையும் நாம் மதிக்கின்றோம். இத்தனியுரிமை அறிவித்தலின் நோக்கமாவது எமது வங்கியியல் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக எவ்வாறு தனிப்பட்டத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படவேண்டும் என்பதனை ஒழுங்குபடுத்துவதாகும்.

வங்கியானது வாடிக்கையாளர்களது தரவுகளின் நியாயமானதும் ஒழுக்கமானதுமான பாவனையை உறுதிப்படுத்துவதற்காக வினைத்திறனான பணிப்பாளர் சபையின் அனுமதிப்பெற்ற கொள்கைகளையும் செயன்முறைகளையும் கொண்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களிற்கு உத்தரவாதமளிக்கின்றோம்.

"தனிப்பட்ட தகவல்கள்" என்பது அத்தகைய தகவல்களினால் (அதனால் தனித்தோ அல்லது ஏனைய தகவல்களுடன் ஒன்றிணைந்ததாகவோ) அடையாளப்படுத்தப்படக்கூடிய இயல்பான நபரொருவர் எனப்பொருள்கொள்ளப்படும்.

## 1. நாம் யார்

தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி (இல. PQ 27 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டதும்) இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை எனும் முகவரியில் பதிவுபெற்ற அலுவலகத்தைக் கொண்டுள்ளதுடன், 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைகக்கப்பட்டுள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் மீள்பதியவுசெய்யப்பட்டுள்ளதுடன் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறாக, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரகாரம், அனுமதிப்பெற்ற வர்த்தக வங்கியொன்றாக இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கவும்பட்டுள்ளது. எம்முடைய தொடர்பு விபரங்களை https://www.ndbbank.com/contact இல் பார்வையிடலாம்.

## 2. உங்களது தனிப்பட்ட தகவல்களை நாம் ஏன் சேகரிக்கின்றோம்.

நாம் உங்களது தனிப்பட்ட தகவல்களை சேகரித்து, பயன்படுத்தி, செயற்படுத்தி மற்றும் தக்கவும் வைத்துக்கொள்வதாவது;

(அ) **பின்வருவன உள்ளடங்கலாக, உங்களுக்கு எமது சேவைகளை வழங்கவும் தொடர்ச்சியாக மேம்படுத்தவும்**

i) தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் சேவைகளிற்காக உங்களுக்கான எமது கடப்பாடுகளை புரிவதற்கான அவசியமாகவும்

ii) உங்களது அடையாளத்தைப் பரிசோதிக்கவும் அறிக்கைகளைப் பெறவும் மற்றும் உங்களது கடன் பெறுத்தகைமையை மதிப்பிடவும்

iii) உங்களுக்கான கணக்கு அல்லது வசதியை தாபித்து முகாமைத்துவம் செய்யவும் நீங்கள் ஈடுபட விரும்பும் கொடுப்பனவு கோரிக்கை உள்ளடங்கலாக பரிமாற்றங்களை முன்னெடுக்கவும்.

iv) உங்களால் கோரப்பட்ட சேவைகளை வழங்கவும் மற்றும் எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளின் வழங்கலிற்காக உங்களிடமிருந்தான ஏதேனும் நிலுவைகளை அறவிடுவதற்கும்

v) எமது பதிவுகளை இற்றைவரையிலாக பேணுவதற்கும்

**(ஆ) எம்முடைய சட்ட நலன்களிற்காக**

i) நல்லாளுகைக்காக, எம்முடைய செயற்பாடுகளை கணக்கிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காய்வுசெய்தல்

ii) கடன் குறிப்பீடு முகவரகங்களில் தேடுவதற்காக

iii) தர உத்தரவாதப்படுத்தலிற்காக தங்களது கணக்கின் மின்னஞ்சல்கள், தொலைபேசி பதிவுகள், ஏனைய தொடர்பாடல்கள் மற்றும் செயற்பாடுகளை கண்காணித்தலும் மதிப்பாய்தலும்

iv) சந்தை ஆய்விற்காக, புள்ளிவிபரங்களை பகுப்பாய்தலும் விருத்திசெய்தலும்.

**(இ) சட்டக் கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காக**

i) தரவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் நீங்கள் உங்களது உரிமைகளைப் பயன்படுத்தும் போதும் மற்றும் கோரிக்கைகளை மேற்கொள்ளும்போதும்.

ii) சட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்துகைகளுடன் இணங்கியொழுகுதலிற்காகவும்

iii) சட்ட உரிமைகளை தாபிக்கவும் பாதுகாக்கவும்

iv) குற்றத் தடுப்பு, துப்பறிவு மற்றும் விசாரணையுடன் தொடர்புடைய செயற்பாடுகளிற்காகவும்

v) உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தவும், கடன், மோசடி தடுப்பு மற்றும் பணதூயதாக்கலுக்கு எதிரான பரிசீலனைகளை மேற்கொள்ளவும்

vi) உங்களது கணக்குச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புக்கள், ஏனைய தொடர்பாடல் மற்றும் செயற்பாடுகளை மீளாயவும்

vii) தேசியப் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் நிதி முறைமைகளது பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகவும்

**(ஈ) உங்களது ஒப்புதலின் அடிப்படையில்**

i) உங்கள் சார்பான கோரல்களை கையாளும் அல்லது ஏனையவகையில் வெளிப்படுத்துகைக்கு இணங்கிய கம்பெனி அல்லது ஏனைய மக்கள் அல்லது நிறுவனத்திற்கு உங்களது தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துமாறு நீங்கள் எம்மை கோரும்பொழுது

ii) உங்களது கோரிக்கையின்பேரில் உங்களது தனிப்பட்ட தகவல்களது விசேட வகைப்பாடுகளை நாம் செயற்படுத்தும் போது (உங்களது இன அல்லது இனத்துவ மூலங்கள்)

iii) உங்களிற்கு சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களை அனுப்பி அவ்வாறு செய்வதற்காக உங்களது ஒப்புதலை நாம் கேட்கும்போது.

**3. நாம் சேகரித்து செயற்படுத்தும் தனிப்பட்ட தகவலின் வகைகள்**

NDB வங்கியானது தொடர்புடைய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்திற்கு பொருந்தியே உங்களது தகவல்களை சேகரித்து செயன்முறைப்படுத்தும். தனிப்பட்ட தகவல்களானவை பின்வருவனவற்றை உள்ளடக்கினும் அதற்கென வரையறுக்கப்பட்டதாக காணப்படாது.

i) பெயர், முகவரி (நிரந்தர மற்றும் தொடர்புகொள்ளும்), பிறந்த திகதி மற்றும் இடம் மற்றும் தொடர்பு விபரங்கள் (தொடர்பு எண்கள்/ மின்னஞ்சல்), தேசிய இனம், தேசிய அடையாள அட்டை இல., தொழில்/ வியாபார விபரங்கள் உள்ளிட்ட அடிப்படை தனிப்பட்ட தகவல்கள்

ii) கணக்கு மற்றும் பரிமாற்ற தகவல் மற்றும் வரலாறு, எதிர்திறத்தவர்களின் விபரங்கள், கொடுப்பனவுகள், கொடுப்பனவு செலுத்துநரின் விபரங்கள், நிதி பொறுப்புக்கள், எம்மிடமிருந்தான உற்பத்தி மற்றும் சேவைக்காக விண்ணப்பித்தலின் பகுதியொன்றாக உங்களால் வழங்கப்பட்டிருக்கும் ஏனைய நிதி நிறுவனங்களின் வங்கிக் கூற்று மற்றும் கடனட்டை கூற்றின் பிரதிகள் உள்ளடங்கலாக, நிதியியல் தகவல்.

iii) உங்களது குடும்பம், அரசியல்ரீதியாக முகங்கொடுக்கவேண்டியவர், வாழ்க்கைமுறை மற்றும் சமூக சுற்றம் மற்றும் விருப்பத்தேர்வுகள் குறித்த தகவல்

iv) தனிப்பட்ட செல்வம், ஆதனம் மற்றும் பொறுப்புக்கள், வருமான மற்றும் செலவீனங்களின் ஆதாரம், கடன் மற்றும் கடன்பெறல் வரலாறு, வருடாந்த மொத்தவரவு மற்றும் எதிர்பார்க்கைகள் உள்ளடங்கலாக உங்களது நிதிச்சூழல் குறித்த தகவல்

v) கல்வி, தொழில் மற்றும் வியாபார தகவல்

vi) வழங்கப்பட்ட உற்பத்தி மற்றும் சேவை

vii) எண்ணிய உள்ளீர்ப்பிற்காக கட்புல படங்கள் மற்றும் தனிப்பட்ட தோற்றங்கள் (அடையாளப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் CCTV படங்களின் பிரதிகள் போன்றவை), குரல் பதிவுகள் மற்றும் கைரேகைகள், KYC இன் காணொளிகள்

viii) உங்களது வங்கிக் கோவை மற்றும் உள்நுழைவு தகவல்கள், இணைய செயன்முறைப்படுத்தி முகவரி, திறன்கருவி தகவல், இடவமைப்பு ஒருங்கிணைப்புக்கள், நிகழ்நிலை மற்றும் மொபைல் வங்கியியல் பாதுகாப்பு உறுதிப்படுத்தல், செல்லிடப்பேசி வலையமைப்பு தகவல், தேடல்கள், தள விஜயங்கள், மற்றும் செலவழிக்கும் அமைப்புமுறைமைகள், குக்கிகளைப் பயன்படுத்தி சேகரிக்கப்படும் தகவல்கள் உள்ளிட்ட எம்முடனும் எமது வலைத்தளம் மற்றும் செயலிகள் உடனான உங்களது இடைவினைகளின் அடிப்படையில், எமது இடவமைப்பு தகவல் (கருவியில் செயற்படுத்தப்பட்டிருப்பின்), நிகழ்நிலை கோவை மற்றும் சமூக ஊடக தகவல் மற்றும் செயற்பாடுகள் போன்ற எண்ணிய/ நிகழ்நிலை சேவைகளை நீங்கள் பயன்படுத்தும் போதிலான எண்ணிய தகவல்.

ix) NDB வங்கியின் வாடிக்கையாளர்/ கடனட்டை உரித்தாளர் என உங்களால் மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்களுடன் தொடர்புடைய தகவல்

**4. நாம் தகவல்களை எவ்வாறு சேகரிக்கின்றோம்**

பொதுவில் NDB வங்கியானது தாங்கள் NDB வங்கிக்கு விஜயம் செய்யும்போதிலோ அல்லது எம்முடைய வலைத்தளம், சமூக ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகத்தினை பயன்படுத்தும்போதிலோ அல்லது பொது மற்றும் தனியார் நிகழ்வுகளில் பங்கேற்கையிலும் மற்றும் எம்முடைய சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், ஆய்வுகள், கணக்கொன்றிற்காக விண்ணப்பிக்கையில், இதரவழிகளில் என உங்களிடமிருந்து நேரடியாகவே தகவல்களை சேகரிக்கும். நாம் பின்வருவன போன்ற மூன்றாம் தரப்பினர் ஊடாகவும் தனிப்பட்ட தகவல்களை சேரிப்போம்;

i) பொதுவில் கிடைக்கப்பெறும் தகவல்கள்
ii) தங்களால் வழங்கப்பட்ட மத்தியஸ்தர்கள்
iii) கடன் தகவல் பணியகம்
iv) World Check போன்ற தனிநபர்கள்/நிறுவனங்களது தகவல்கள் கிடைக்கப்பெறும் தரவுத்தளங்கள்.

எவ்வாறாயினும் நாம் சேகரிக்கும் தனிப்பட்ட தகவல்களானவை எம்முடைய உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்கத் தேவையானவற்றிற்கென மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படும்.

**5. தனிப்பட்ட தகவல்களை நாம் எவ்வாறு களஞ்சியப்படுத்தி செயன்முறைப்படுத்துகின்றோம்.**

NDB வங்கியானது உங்களது தகவல்களை பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்துள்ளது. அதன்காரணமாக, உங்களது தனிப்பட்ட தகவல்கள் வகைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் சட்டப்பூர்வமான நோக்கங்களிற்கென செயன்முறைப்படுத்தபடுகின்றது என்பதனையும் உங்களது தகவல்களை காப்பாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்கான இலங்கையின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியதாக போதுமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதனையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம். எமக்கு அவை தேவைப்படாதவிடத்து தரவுகளை அழிப்பதற்கு அல்லது நிரந்தரமாக அடையாளப்படுத்தமுடியா தன்மைக்கு இட்டுச்செல்வதற்கான நியாயமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

NDB வங்கியானது அத்தகைய தகவல்களின் இரகசியத்தன்மை, கண்ணியம் மற்றும் அணுகுந்தன்மை என்பவற்றை பாதுகாப்பதற்கு தேவையான தர்க்க மற்றும் பௌதீக பாதுகாப்பு கட்டுப்பாடுகளுடன் தனிப்பட்ட தகவல்களை களஞ்சியப்படுத்தலிற்கு தேவையான பாதுகாப்பு தராதரங்களை NDB பேணுகின்றது.

**6. உங்களது தனிப்பட்ட தகவல்களை நாம் வெளிப்படுத்துவது எப்போது**

NDB வங்கியினால் வாடிக்கையாளர் குறித்து பெறப்பட்ட தகவலானது உயர் இரகசியத்தன்மையுடன் பேணப்படும் என்பதுடன் வங்கியானது இலங்கையின் ஏற்புடைய சட்டங்களிற்கு அமைவாகவே தகவலானது பேணப்பட்டு, பயன்படுத்தப்பட்டு அல்லது வெளிப்படுத்தப்படும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்வது சட்டரீதியானது எனும்போது மற்றும் நோக்கத்திற்கு அடிப்படையானது எனும்வரையில் அத்தகைய தகவல்களை ஏனையவர்களுடன் NDB வங்கி பகிர்ந்துக்கொள்ளும். அனைத்து மூன்றாம் திறத்தவர்களது தகவல்கள் மீதும் அவர்கள் தங்களது தனிப்பட்ட தகவல்களை பேணும் முறையிலேயே ஒழுங்குபடுத்தும் முகமாக, தகவல்களின் கடுமையானப் பாதுகாப்பு மற்றும் இரகசியக்காப்பு கடப்பாடுகளை நாம் அமுல்படுத்தியுள்ளோம். பின்வருவன நாம் உங்களது தனிப்பட்ட தகவல்களை பகிரும் சூழ்நிலைகளாகும்.

i) எம்முடைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் கடப்பாடுகளுக்கிணங்கி ஒழுகுவதற்கு. உதாரணமாக இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கோரிக்கை/ பணிப்புரை விடுக்கப்படும்போது

ii) இடரினை முகாமைத்துவம் செய்வதற்காக தங்களது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு.

iii) உதவிச் சேவைகளை வழங்குவதற்காக NDB உடன் இணைந்துள்ள வெளி நிறுவனம் அல்லது மூன்றாம் திறத்தவருடன். இச்சேவை வழங்குநர் இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ இருக்கலாம். உதாரணமாக கடன் வசூலிப்பாளர்கள், விண்ணப்ப செயன்முறைப்படுத்தலிற்காக இணைந்துள்ள நபர்கள், தொழிநுட்ப சேவை வழங்குநர்கள், ஏனையோருடன்.

iv) வங்கியின் குறித்த சில செயற்பாடுகள் வெளிவளங்களை கொண்டிருப்பின் அத்தகைய வெளித் திறத்தவர்கள். உதாரணமாக: காசுகளை வழங்கும் சேவைப் பிரதிநிதிகளுடன்.

v) உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது உங்களது தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்த உங்களால' எமக்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுடன்.

vi) உங்களிற்கு கடன் வழங்க அல்லது NDB வங்கிக்கான உங்களிடமிருந்தான ஏதேனும் நிலுவைகளை வசூலிப்பதற்காக எங்களுடன் தொடர்பிலுள்ள கடன் அறிக்கையிடல் நிறுவனங்களுடன்.

vii) நீங்கள் கோரிய உற்பத்தி மற்றும் சேவையுடன் தொடர்புடையனவற்றை வழங்குதல் மற்றும் இவ்வுற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பில் தங்களிற்கு அறியத்தரலிற்காக ஏதேனும் NDB குழும கம்பெனிகளுடன்.

viii) பொறுப்பு வங்கிகளினால் NDB வங்கிக்கு குறிப்பீடுசெய்யப்பட்ட சில பரிமாற்றங்களின் மீதாக பெற்றுக்கொள்ளப்பட்ட மேம்படுத்தப்பட்ட உரிய விழிப்புக்கவன விசாரணைகளிற்காக அத்தகை பொறுப்பு வங்கிகளுடன்.

சட்டத்தினால் வேறுவகையாக அனுமதியளிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு முன்னதாக தங்களிடமிருந்து முற்கூட்டிய அனுமதி பெறப்பட்டிருத்தல்வேண்டும்.

### 7. அநாமதேயமாக்கப்பட்ட தரவு

தங்களது தனிப்பட்ட தகவலானது தங்களை அடையாளப்படுத்த முடியாதவாறு புள்ளிவிபர அல்லது கூட்டுமொத்தமாக்கப்பட்ட தரவுகளாக மாற்றப்படும். கூட்டுமொத்தமாக்கப்பட்ட வடிவம் உள்ளடங்கலாக, அத்தகைய அநாமதேயமாக்கப்பட்ட தரவுகளை புள்ளிவிபர பகுப்பாய்வு, ஆய்வு மற்றும் ஏனைய வியாபார நோக்கங்களிற்காக NDB குழுமக் கம்பெனிகளிற்கு உள்ளேயும் வெளியேயும் பகிரலாம். உதாரணமாக, ஆய்வொன்றிற்கு உதவுவதற்காக இலங்கையின் பொதுச் செலவீனப் போக்குகள் குறித்த தகவலை பகிர்ந்துக்கொள்ளல்.

### 8. தகவல்களை வெளிநாடுகளிற்கு பரிமாறுதல்

NDB வங்கியானது சட்ட கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்காகவும் பொது நலனை பாதுகாப்பதற்காகவும் அல்லது எமது சட்டப்பூர்வ நலன்களிற்காகவுமாக தகவல்களை வெளிநாடுகளிற்கு பகிரவேண்டியேற்படலாம். எவ்வாறாயினும், தகவலானது சட்டப்பூர்வமான முறையிலும் பொருத்தமான பாதுகாப்பு மட்டங்களுடனும் வெளிநாடுகளிற்கு பகிரப்படுவதனை நாம் உறுதிப்படுத்துவோம்.

எம்முடைய ஏதேனும் தகவல் முறைமை உட்கட்டமைப்பானது இலங்கைக்கு வெளியே அமைந்திருக்குமாயின், உங்களது தனிப்பட்ட தகவல்களை வெளிநாடுகளிற்கு NDB பகிரவேண்டியதாகின்றது. எவ்வாறாயினும், இலங்கைக்கு வெளியே உங்களது தனிப்பட்ட தகவலின் அத்தகைய பரிமாற்றத்திற்கு முன்னதாக உங்களுக்கு முற்கூட்டியே அறிவித்து உங்களது ஒப்புதலையும் பெற்றுக்கொள்வோம்.

### 9. உங்களது தகவலை எவ்வளவு காலத்திற்கு பேணுவோம்?

NDB தரவுப் பேணல் கொள்கைக்கு இணங்க உங்களது தனிப்பட்ட தகவலானது பாதுகாப்பாக பேணப்படும் என்பதை NDB உறுதிப்படுத்தும் என்பதுடன் NDB ஆனது சட்ட மற்றும் ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகளிற்கு இணங்கியொழுகும் முகமாக நீண்ட காலப்பகுதியிற்கு உங்களது தகவல்களை பேணும். எவ்வாறாயினும், தரவானது தேவைப்படாதவிடத்து வங்கியானது உங்களது தனிப்பட்ட தகவலை அழிக்கும் அல்லது நிரந்தரமாக அடையாளவழிப்பிற்குட்படுத்தும்

### 10. உங்களது உரிமைகள்:

தற்போதிருக்கும் சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகளிற்கு உட்பட்டதாக:

(i) தகவலிற்காக NDB யை கோருவதன்மூலம் உங்களது தனிப்பட்ட தரவுகளை அணுகுவதற்கு உங்களிற்கு உரிமையுள்ளது.

(ii) உங்களிடமிருந்து நாம் சேகரித்த தனிப்பட்ட தகவலை இற்றைப்படுத்த, அழிக்க, செயற்படுத்தலை கட்டுப்படுத்த உங்களிற்கு உரிமையுள்ளது. அத்தகைய கோரிக்கையை அடையாளப்படுத்தும் சிலப் படிவங்களை கையெழுத்திடுதல் மற்றும்/அல்லது உங்களை கேள்வி கேட்பதனால் உங்களது அடையாளத்தினை உறுதிப்படுத்தியதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படக்கூடுமானதாக எழுத்துமூலம் வங்கிக்கு சமர்பிக்கலாம்.

(iii) நாம் கொண்டிருக்கும் உங்களது தனிப்பட்ட தகவலானது முழுமையற்றது, சரியானதல்ல, பொருத்தமற்றது, இற்றைப்படுத்தப்படாதது அல்லது தவறாக வழிநடத்தக்கூடியது என நீங்கள் நம்பினால் அதனை திருத்துமாறு நீங்கள் கேட்கலாம். எவ்வாறாயினும், பிரகடனத்தின் பிரகாரம் கண்டடையப்படாதது அல்லது மிகையானது அல்லது

- சட்டத்திற்கு புறம்பானதாக காணப்படுகின்றது;
- தனிநபரின் உயிர், பாதுகாப்பு அல்லது சுகாதாரத்திற்கு அல்லது பொதுமக்களின் சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு கடுமையான அச்சுறுத்தலை வெளிப்படுத்துகின்றது;
- ஏனையவர்களது தனியுரிமைக்கு நியாயமற்ற தாக்கத்தினை கொண்டுள்ளது;
- செயற்படுத்தலை உருவாக்கும் வர்த்தக கூருணர்வு தீர்மானத்தினை வெளிப்படுத்தலில் ஈடுபட்டிருக்கின்றது;
- குற்ற வழக்குகள் அல்லது உங்களுடனான பேச்சுவார்த்தைகள் போன்ற அமுலாக்க செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்கின்றது; அல்லது
- சட்டப் பிணக்கு தீர்மான நடவடிக்கைமுறைக்கு தொடர்புடைய குறிப்பிட்ட தகவலை வெளிப்படுத்துகின்றது

எனக் காணப்பட்டால், அக்கோரிக்கையின்கீழ் செயற்படுவதற்கு மறுக்கும் உரிமையை NDB வங்கி கொண்டுள்ளது.

(iv) தகவலை வழங்க அல்லது கோரப்பட்ட செயலை முன்னெடுக்க நிர்வாக கட்டணமொன்றை விதிப்பது தெளிவாக நியாயமற்றது மற்றும்/அல்லது மிகையானது எனப்படுகையில் அவ்வாறு செயற்படமறுப்பதற்கான உரிமையை நாம் கொண்டுள்ளோம்.

(v) உங்களது தரவினை செயற்படுத்த வங்கிக்கு வழங்கிய உங்களது ஒப்புதலை மீளப்பெற நீங்கள் விரும்பும்போது, அதனை வழங்கப்பட்ட எந்நேரத்திலும் செய்யலாம்.

(vi) NDB வங்கியானது இத்தனியுரிமை அறிவித்தலை மீறியுள்ளது மற்றும் அத்தகைய மீறல் குறித்து எழுத்துமூலமாக NDB வங்கிக்கு அறிவித்த பின்னரும், நியாயமான காலப்பகுதிக்குள் அத்தகைய மீறலை திருத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென நீங்கள் நம்பினால் தரவு பாதுகாப்பு சட்டத்தின்கீழ் தரவு பாதுகாப்பு ஒழுங்குபடுத்துநரிற்கு முறையிடும் உங்களது உரிமையை நீங்கள் பிரயோகிக்கலாம்.

## 11. தனியுரிமை அறிவித்தலிற்கான திருத்தங்கள்

தற்போதிருக்கும் தனியுரிமை அறிவித்தலை எந்நேரத்திலும் திருத்துவதற்காக உரிமையை நாம் கொண்டுள்ளதுடன் அத்தகைய ஏதேனும் திருத்தங்கள் NDB வங்கியின் வலைத்தளத்தில் இடப்படும்.

## 12. விசாரணைகளும் முறைப்பாடுகளும்

NDB வங்கி உங்களது தனிப்பட்ட தகவலை எவ்வாறு கையாளுகின்றது என்பது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளிற்கு https://www.ndbbank.com/contact எனும் தளத்தில் காணப்படும் தொடர்பு விபரங்களைப் பயன்படுத்தி தயவுசெய்து எம்மைத் தொடர்புகொள்ளவும்.

## 13. சட்டத்தை ஆளுதல்

இதன்பாலாக, NDB இற்கும் உங்களிற்கும் இடையில் ஏதேனும் பிணக்குகள் அல்லது உறவுமுறைக்கு அப்பாலாக எழும் ஏதேனும் மீறல்கள், அடிப்படையில் திறத்தவர்களுக்கிடையிலான பரஸ்பர ஆலோசனைகளின் உதவியுடன் NDB மற்றும் உங்களால் தீர்த்துக்கொள்ளப்படவேண்டும். அத்தகைய ஏதேனும் பிணக்குகள் தீர்த்துக்கொள்ளப்படமுடியாதவிடத்து, இலங்கையின் நீதிமன்றங்களது பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு குறிப்பீடுசெய்யப்படவேண்டும்.